தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-11-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய மாணவர் படை நாள் விழா

இந்தியாவில் தேசிய மாணவர்படை நாள் நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 4 மற்றும் 5 தமிழ்நாடு பட்டாலியன் சார்பாக தேசிய மாணவர்படை நாள் விழா 26-11-2016 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் கு. ராமசாமி விழாவிற்குத் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். அவரது உரையில் மாணவர்களை ஊக்கப்படுத்தியும் தேசிய மாணவர் படையின் முக்கியத்துவத்தையும் உணர்த்தினார்.

கோவை தேசிய மாணவர் படை தலைமை அதிகாரி கர்னல் செலஸ்டின் சிறப்பு விருந்தினராக கலந்து கெண்டு சிறப்புரையாற்றினார். அவர் இந்தய ராணுவத்தில் மணவர்களின் பங்களிப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவரும் இராணுவ அதிகாரிகளுமான கேப்டன் தீனதயாளன் மற்றும் கோவை ராணுவ அகாடமியின் பயிற்சி அதிகாரி லெப்டினன்ட ஈசன் ஆயோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர்கள் இந்திய ராணுவத்தில் தனது அனுபவங்களை மாணவர்களிடையே பகிர்ந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர் சுதர்சன் தற்போது கடலோரக்காவல்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் இந்திய ராணுவத்தில் வேலைவாய்ப்பு மற்றும் அதற்கு தங்களை தயார்படுத்துவது குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மைக் கல்லூரி முதன்மையர் முனைவர் ச.மகிமைராஜா தேசிய மாணவர் படையின் நோக்கத்தையும் தேசியப் பாதுகாப்பில் அவர்களின் முக்கியத்துவத்தையும் பாராட்டினார். இதில் சுமார் 100 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கெண்டு விழாவை சிறப்பித்தனர்

முன்னதாக, தேசிய மாணவர் படை அதிகாரி கேப்டன் எஸ். மனோன்மணி வரவேற்றார். தேசிய மாணவர் படை அதிகாரி லெப்டினன்ட கு. ம. செல்லமுத்து விழா ஏற்பாடுகளை செய்தும் நன்றியுரையும் ஆற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்